விலை: 50.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 034 வள்ளுவர் ஆண்டு 2053 தை 09 சனிக்கிழமை (22.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கிளிநொச்சி புன்னைநீராவி பகுதியில்

## தீயில் எரிந்து உருக்குலைந்த நிலையில் தாயும் மகளும் சடலங்களாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவி நாதன் குடியிருப்பு பகுதியில் தாயும் 17 வயது மகளும் தீயில் எரிந்து உருக்குலைந்த நிலையில் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11.50 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் 47 வயதுடைய ஆனந்தராசா சீதேவி எனும் 07 பிள்ளைகளின் தாயாரும் 17 வயது

15

காணாமல் ஆக்கப்பட்ட

## மகனை தேடியலைந்த மேலும் ஒரு தாய் மரணம்



(வவுனியா)

வவுனியாவில் காணாமல்போன தனது மகனைத் தேடிவந்த தாய் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

வவுனியா பூம்புகார் கல்மடு பகுதியைச் சேர்ந்த கருப்பையா

15




மனித உரிமைகள் பாதுகாப்பு என்பது

# ஜனாதிபதி கோட்டாவின் வாய்ச்சொல் மட்டுமே

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



*(கொழும்பு)*

**நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி கூறினாலும் அது வெறும் வாய்ச்சொல்லே தவிர செயலில் வெளிப்படுத்தவில்லை என சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் கடந்த 2008 ஆம் ஆண்டு 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் கிடைக்காத நியாயம் இதனை வெளிப்ப

15

2021 ஆம் ஆண்டுக்கான

## புலமைப்பரிசில் பரீட்சை இன்று

(கொழும்பு)

கோவிட் பரவல் காரணமாக பிற்போடப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை இன்று இடம்பெறவுள்ளது.

இரண்டாயிரத்து 943 பரீட்சை மையங்

15

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தீ விபத்து

## சிகிச்சை நிலையங்கள் உட்பட 5 பகுதிகள் எரிந்து நாசம்

ஒரு கோடி பெறுமதியான வைத்திய உபகரணங்கள் சாம்பலாகியது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தி

15

## சுன்னாகம், இளவாலையில் பட்டப்பகலில் வழிப்பறி

இரு நகைக்கடை உரிமையாளர்கள் உட்பட ஐவர் கைது



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மற்றும் இளவாலையில் பட்டப்பகலில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிரதான சந்தேக நபர்கள் மூவர் மற்றும் நகைக்கடை உரிமையாளர்கள் இருவர் உட்பட

15

## 6 இலட்சத்தை கடந்த தொற்று

+840 பேர் நேற்றும் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில்

15

மாகாண சபைத் தேர்தலை நடத்தி

## ஜனநாயக உரிமைக்கான தளத்தை ஏற்படுத்த வேண்டும் - அமைச்சர் நிமல்

(கொழும்பு)

இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விரைவில் தேர்தலை நடத்தி ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்துவதற்கான தளத்தை மக்களுக்கு

15

கொரோனா

## 17 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 17 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலி



தாய் மடியில் 21.08.1956

சிவனடியில் 23.12.2021

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகவும் வவுனியா பூந்தோட்டம், குட்செட் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் குணரெட்ணம் செல்வராணி

நாங்கள் பார்த்திருக்கவே
சித்திரம் ஒன்று சிதைந்து போனதே!
நாங்கள் விழித்திருக்க கோலமொன்று
கலைந்து போனதே!
எங்களின் கண்முன்னாலேயே
வண்ணப்பூவொன்று
மண்ணில் மறைந்ததுவே!
என்ன செய்வோம் ஏது செய்வோம்?
நிம்மதியில்லை எமக்கு...
அர்ப்பணிக்கின்றோம் எம்
அஞ்சலிகளைக் கண்ணீர்த்துளிகளாக
தங்களின் பாதங்களின் சந்நிதியில்...
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-3594)

இல. 29, குட்செட் வீதி,
வவுனியா.

077 934 4960

குடும்பத்தினர்

# வடமாகாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏழு பேர் உட்பட வடக்கில் மேலும் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடம் என்பவற்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)


## காணி விற்பனைக்கு

உடுவில் பொது வாசிகசாலை, பிரதேச செயலகம் ஆகிய இடங்களிற்கு மிகவும் அருகாமையில் (50 மீற்றர் தூரத்தில்) 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

Contact number
Sam Deluxan Jesujeyaselan
+94 77 227 6563

(9773)

## புதிய பிரிவுகள் ஆரம்பம் 2022

1. Spoken English - 04 மாதங்கள்
2. சிங்கள பாடநெறி - 06 மாதங்கள் (பேச்சு, எழுத்து உட்பட)

க.பொ.த. உயர்தர, பல்கலைக்கழக, உயர்கல்வி கற்கும் ஏனைய மாணவர்கள், தொழில் புரிவோர் உட்பட அனைவருக்கும்.

ஆசிரியர் - ந. செந்தூரன்

ஆரம்பம் - ஜனவரி 30
காலை 10.30 மணி

நேரடி வகுப்பு - CCA சுன்னாகம்

Zoom வகுப்பு
தொடர்பு - 074 215 8340

ஏற்கனவே கற்கும் மாணவர்களுக்கு 30% கழிவு.

(9744)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு
பிள்ளையார் கோவில்
வடக்கு வீதியில்
24 பரப்புக் காணி 2 பரப்பாகவும்
1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட
நிலையில் விற்பனைக்குண்டு.

நல்ல சூழல்.
வீடு அமைப்பதற்கு உகந்தது.

நிலப்பரப்பு
24 அடிப் பாதையுடன்
பலாலி வீதியிலிருந்து
500 மீற்றர் தூரம்

தொடர்பு
077 658 5999

(9780)


# மரண அறிவித்தல்



## திருமதி பரஞ்சோதி கமலாசினி (பங்கசம்)

பிறப்பு : 18.03.1948 இறப்பு : 17.01.2022

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி கமலாசினி (பங்கசம்) அவர்கள் கடந்த 17.01.2022 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கெங்காதரம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செகநாயகம்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கலைவாணி, கலைச்செல்வி, கலைவாணன் (கனடா), Dr. கலைமாறன், கலைச்செல்வன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வச்சந்திரன், கிரிதரன், ரேணுகா, வலன்ரீனா ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்ஷிகன், கஸ்தூரி, அனுஜன், ரித்திக்கா, யதுஷன், அமீரா, சாரவ், ஐரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற காங்கேயன், ஈஸ்வரி, லோகேஸ்வரி, பூங்கோதை, கலாவதி, காலஞ்சென்ற ரஞ்சினி, சிவகுமார், தயாளன், விமலன், அம்பிகை, அம்பிகைபாகன், மங்களம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், அன்னராசா, காலஞ்சென்ற மகேந்திரம், ஜெகதாம்பிகை, காலஞ்சென்ற வசீகரநாதன், ஜெகசோதி, ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, சந்தனமாலா, பாலசுந்தரம், கண்ணன், முத்துலட்சுமி, நவலட்சுமி, விஜயலட்சுமி, இரத்தினசபாபதி, சந்திரமாலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.01.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-3596)

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

077 869 7270

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை மூலமே தமிழினத்திற்கு தீர்வு கிடைக்கும்

## சிவாஜிலிங்கம் உறுதி



**(யாழ்ப்பாணம்)**

**இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கொள்கை உரையின் போது ஜனாதிபதி பேசியிருந்தால் மட்டுமே நாம் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். அது குறித்து அவர் மூச்சும் விடவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

படையினரிடம் சரணடைந்து காணாமல் போனவர்கள் தொடர்பில் நீதி கிடைக்க வேண்டும். ஆனால் அவற்றுக்கான நீதியை இலங்கை அரசாங்கத்தால் வழங்க முடியாது. ஆகவே இலங்கை அரசாங்கம் இதனை ஏற்றுக் கொண்டு சர்வதேச நீதி விசாரணையை நடத்த வேண்டும்.

அதை விடுத்து திரும்பத் திரும்ப மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது.

அத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி மூச்சும் விட்டிருக்கவில்லை. மூச்சுவிட்டிருந்தால் தான் நாம் ஆச்சரியப்பட்டு இருக்க வேண்டும். புதிய அரசியலமைப்புக்கான குழுவை ஜனாதிபதி நியமித்து இருந்தார்.

அந்தக் குழுவுக்கு அரசியல் கட்சிகள், பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை சமர்ப்பித்திருந்தனர்.

ஏறக்குறைய அது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சென்று வருமா, வராதா? என்ற நிலையில் காணப்படுகிறது. இதுவே நல்லாட்சியிலும் நடந்தது.

இதற்கு முதலில் அல்லவா தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்க வேண்டும். இனிமேல் அழைத்து என்ன பேசப் போகிறார்கள்.

பிரதான தமிழ்த்தேசிய அணிகளான மூன்று அணிகளில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி கூட்டு இணைப்பாட்சியையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகியன சமஷ்டியையும் கோருகின்றன.

ஆனால் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு அறவே இல்லை. இந்தச் சூழ்நிலையில் இனப்படுகொலை உட்பட போர்க்குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக தீர்வு காணப்பட வேண்டும்.

இதற்கு மூல வேரான தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பல நாடுகளில் நடைபெற்றது போல பொதுசன வாக்கெடுப்பு நடத்த வேண்டியது கட்டாயம். இதை விடுத்து 2025 இலும் சிம்மாசன உரை பற்றி கதைத்துக் கொண்டிருக்கப் போகின்றோம் என்றால் எங்களைப் போன்ற முட்டாள்கள்இருக்கமுடியாது என அவர் தெரிவித்தார்.(நி-5-33)

## பாலின் கொள்வனவு விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மில்கோ நிறுவனம், பால் பண்ணையாளர்களிடம் இருந்து பாலை கொள்வனவு செய்வதற்கான விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் ஒரு லீற் றர் பாலின் கொள்வனவு விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

(நி-5)

## இலங்கைக்கு உதவத் தயார் தென்கொரிய சபாநாயகர்

(கொழும்பு)

இலங்கையின் வேலை வாய்ப்பு தொழிற்பயிற்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு தென்கொரிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என தென்கொரிய தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் சியோக் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாவிற்கும் பார்க் பியோங் சியோக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# முதலாம் ஆண்டு நினைவுகளில்

**தோற்றம்**
**19.07.1959**

**மறைவு:**
**02.02.2021**



## அமரர்.தியாகராசா கிருபாகரன்

திதி:- தேய்பிறை பஞ்சமி

அன்புடனும் பாசத்துடனும்
பாதுகாத்த எங்கள் அன்பு அப்பாவே
எங்கள் அனைவரையும் விட்டுப்
பிரிந்தது தான் ஏனோ?
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என எண்ணிக் கனவுகள் கண்டிருந்தோம்
இடை நடுவில் எம்மைத் தவிக்க விட்டு
ஏன் அப்பா ஓடி மறைந்து விட்டீர்கள்-காலன்

உங்களை காலத்தால் அழைத்த வேளை
அத் துன்பத்தை ஏற்றுக் கொள்ள
எம் மனதால் முடியவில்லை.
எம் வாழ்வுள்ளவரை என்றும் நீங்கள்
எம் இதயங்களில் குடியிருப்பீர்கள்
இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையெனில்
நீங்களே [illegible] அப்பா[illegible]

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(9738)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# சு.க. பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## நாமல் வலியுறுத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொறுப்புடன்செயற்பட வேண்டும் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"உள் விவகாரங்கள் ஏதேனும் இருந்தால், அவை அமைச்சரவைக் கூட்டத்திலோ, அரச கட்சிக் கூட்டத்திலோ அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டத்திலோ மட்டுமே விவாதிக்கப்பட வேண்டும் என்று அரசியல் தலைமைகள் கவனத்தில்கொள்ள வேண்டும்"

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லாமல் தற்போதைய நிர்வாகம் முன்னோக்கிச் செல்ல முடியுமா என ஊடகவியலாளர்கள் வினவியபோது, தனிநபர்கள் ஆட்சி செய்வதற்காகப் பொது மக்கள் வாக்களிக்கவில்லை என்றும், தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் கொள்கைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் நாமல் தெரிவித்தார். அரச அரசியல் வாதிகள் என்ற வகையில் கருத்துக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்றும் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிக் கூட்டணியாகப் போட்டியிடுவதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்தத் தீர்மானம் தமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விருப்பம் என்றும் தெரிவித்தார். (நி-5)

# பொறளை வீட்டுத் தொகுதியில் தீ பரவல் ஐந்து வீடுகள் முற்றாக எரிந்து நாசம்



(கொழும்பு)

கொழும்பு பொறளை கித்துல்வத்த வீதியில் உள்ள வீட்டுத் தொகுதியில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து வீடுகள் முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக பொறளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த சம்பவத்தில் உயிர்ச்சேதமோ, காயங்களோ ஏற்படவில்லை. தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை என தெரிவித்துள்ள பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
1942 – 05 – 25



விண்ணில்
2022 – 01 – 21

## புவனேஸ்வரி சுப்பிரமணியம்

முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (21.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் வசந்தகுமார் (மேலதிக அரசாங்க அதிபர் - மன்னார்), உதயகுமார் (அதிபர் - கூமாங்குளம், வவுனியா), மணிமாலா, காலஞ்சென்ற ஜெயநேசன் (தயாளன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பதுமினி, அருள்மொழி (HNB ஹற்றன் நஷனல் வங்கி, நிறைவேற்று அதிகாரி, வவுனியா), செல்வரத்தினம் ஆகியோரின் மாமியாரும் வாகீசன் (மென்பொருள் பொறியியலாளர்), அனுஷன் (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக் கழகம்), கங்கேஸ்வரன் (சிலிற் பல்கலைக்கழகம், கொழும்பு), புருசோத்தமன் (மாணவன் - வவுனியா த. மத்திய மகா வித்தியாலயம்), கிருசிகா (மாணவி - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), அர்சிகன் (L.B. Finance, முல்லைத்தீவு), ஆர்த்திகன் (மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 3ஆம் வட்டாரம் காட்டுவிநாயகர் கோவில் வீதி, முள்ளியவளையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : S. வசந்தகுமார் (மகன்)
மேலதிக அரசாங்க அதிபர், மன்னார்.

(9781)

# இந்தியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்க அணி

இந்திய அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் தென்னாபிரிக்க அணி 31 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி கடந்த புதன் தென்னாபிரிக்காவின் பார்ல் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களை குவித்தது.

ராசி வான் டெர் டுசன் 129 ஓட்டங்களுடனும் டேவிட் மில்லர் 2 ஓட்டங்களுடனும், களத்தில் இருந்தனர். இந்தியா தரப்பில் பும்ரா 2 விக்கெட்டுகளும், அஷ்வின் 1 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து 297 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இந்தியா, முதலில் கவனமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் களமிறங்கிய வீரர்கள் எதிர்பார்த்த அளவுக்கு அதிரடியாக ஆடத் தவறியதால் ரன்ரேட் வெகுவாக சரிந்தது. சீரான இடைவெளியில் விக்கெட்டுகளும் சரிந்தன. (4-6)


காரைநகர்
## கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்

## சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 175ஆவது இசை ஆராதனை விழா
## அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்
காலம் : 22.01.2022 சனிக்கிழமை பி.ப. 2.00 மணி

நிகழ்வுகள்:
- தொடக்கவுரை : இசைகலைமணி ஸ்ரீமதி வாசஸ்பதி றஜீந்திரன்
- ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கும் "மங்கள இசை"
- ஈழத்து பிரபல கர்நாடக இசைக்கலைஞர்கள், வாத்திய கலைஞர்கள் இணைந்து வழங்கும் "இசை ஆராதனை"

குறிப்பு:
- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப. 1.30 மணிக்கு (இல. 428, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்) ஆரம்பமாகும். (யாழ். வண்ணை சிவன்கோவில் அருகாமை)
- நிகழ்வுகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.
- மங்கள இசை, இசை ஆராதனையில் பங்குகொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்து கொள்ளலாம்.
- தியாகராஜ சுவாமிகள் அருளிய கீர்த்தனைகளில் விரும்பிய கலைஞர்கள் ஒவ்வொரு கீர்த்தனை வீதம் இசைத்தல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (C-3597)

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2493

### சந்துரு

வருசத்துல ஒரே ஒரு நாள் மாட்டை அடக்குறது மட்டும் வீரம் இல்லை



கட்டின பொண்டாட்டிய ஆயுள் முழுதும் சமாளிச்சு குடும்பத்த ஓட்டுற ஒவ்வொருத்தரும் பெரிய வீரர் தான்.

### பாக்கியா

உனக்கு ஒரு கல்யாணத்த பண்ணி பாக்கனும்னு எங்களுக்கு எல்லாம் எவ்ளோ ஆசை தெரியுமா?




எப்படி டா நடக்கும்?
பார்த்த 10 பொண்ணு வீட்டிலையும் நீயே போய் மாப்பிளை இன்னும் செட்டில் ஆகலைன்னு சொல்லிட்டு வந்தா எப்படி நடக்கும்?

### ரித்விக்



கணவன் : உன்னைக் கட்டிக்கிட்டதுக்கு ஒரு கழுதையை கட்டியிருக்கலாம்.
மனைவி : நீங்க சொல்லிக்கிட்டு இருக்கீங்க நான் எப்பவோ செஞ்சிட்டேன்!

### சல்மா

ஏறுடா மச்சான் போவோம்...
எங்கடா???



ரொம்ப டிப்ரசனா இருக்கு... லொறிக்கு அடியில விடப் போறேன்

### சரவணன்



நிம்மதிங்கிறது செலோடேப் நுனியை தேடுவது போல... அவ்வளவு சீக்கிரம் கிடைத்திடாது

### அர்ச்சனா

ஜாதகத்தில் அதிக பொருத்தம் இருந்தாலும்



தாலி கட்டும் போது நல்ல நேரம் முடியப் போகுதுன்னு தான் சொல்றாங்க


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




12 ஆவது சர்வதேச வர்த்தகச் சந்தை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் இந்த வர்த்தக சந்தை நாளை வரை இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ் (LECS) நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஆகியன இந் நிகழ்வுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்- சிவசாந்தன், ரவிசாந்)




யாழ் மக்களின் கனவுகளையும் அபிலாஷைகளையும் ஊக்குவிக்கும் **DIMO**, யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2022 **(JITF)** இல் பங்கேற்கின்றது. இக் கண்காட்சியில் **DIMO** தமது வர்த்தக நாமங்களின் சர்வதேச ரீதியான தொழில்நுட்ப முன்னேற்றங்களை யாழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் பங்குகொள்கின்றது. இக் கண்காட்சியில் பங்குபற்றி இச்சர்வதேச உற்பத்திகள் பற்றிய அனைத்து விபரங்களையும் அவற்றின் பயன்பாட்டையும் பிரயோகத்தையும் எமது நிபுணர்களிடமே கேட்டறிந்து கொள்ளுங்கள்.

ஜனவரி **21, 22** மற்றும் **23**ம் திகதிகளில் யாழ் முற்றவெளி மைதானத்தில் (யாழ் கோட்டைக்கு அருகில்) இடம்பெறவுள்ள யாழ் வர்த்தக கண்காட்சிக்கு வருகை தந்து **DOME 01** இல் எம்மை சந்தித்து உங்கள் தொழில்துறையை தொழில்நுட்பத்தினைக் கொண்டு மேம்படுத்துவது எவ்வாறு என்பதை அறிந்து கொள்ளுமாறு **DIMO** அன்புடன் அழைக்கின்றது.

**DIMO வழங்கும் உலகின் தலைசிறந்த வர்த்தக நாமங்களினை கண்டறிந்திடுங்கள்!**

www.dimolanka.com 0112 44 97 97

(சி-1606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து காரைநகரில் ஆர்ப்பாட்ட பேரணி

**(யாழ்ப்பாணம்)**

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும் அவற்றினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கமும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**





காரைநகர் பிரதேச சபையின் முன்பாக இடம்பெற்ற இப் போராட்டம் அங்கிருந்து பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்றது.

பிரதேச செயலகத்திற்கு பேரணியாக சென்ற மீனவர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜரும் கையளித்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுக்கடங்காமல் செல்வதனால் எமது கடல் வளங்களும் கடல் சூழலும் எமது உபகரணங்கள், வாழ்வாதாரங்கள் என்பன அழிக்கப்படுகின்றன.

இந்த வருடத்திற்குள் எமக்கு தீர்வினை பெற்று தர சகல தரப்பினர்களும் முயற்சிகளை முன்னெடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், கடல் வளத்தையும் காத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.(4-5-18-33-104)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 8.00 மணி-9.00 வரை இடம்பெறுகிறது.

இக் கருத்தமர்வுகளில் பிரபல மருத்துவ நிபுணர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்.

அந்த வகையில் இன்று சனிக்கிழமை "விடலைப்பருவக் கர்ப்பமும் சமூகப் பிரச்சினைகளும்" எனும் தலைப்பில் கலந்துரையால் இடம்பெறும் என வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். இதில் கலந்து கொள்வதற்கான Meeting ID: 89985282023, Pass code : 354485 ஆகும். (4-6)

## பெரும்போக நெல் அறுவடை வவுனியாவில் பாரிய வீழ்ச்சி

(நெளுக்குளம்)

வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு ஏக்கருக்கு 5 தொடக்கம் 7 மூடைகள் நெல்லே விளையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அதன் அறுவடைக்காலம் நெருங்கியுள்ளதுடன் பல்வேறு பகுதிகளிலும் அறுவடைகள் இடம்பெற்று வருகின்றன.

இம்முறை நெல்லிற்கான பசளை இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருந்தமையால் நெற்செய்கைக்கு தேவையான பசளை இல்லாமல் விளைச்சலில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த காலங்களில் ஏக்கருக்கு 30 மூடைகளுக்கு அதிகமாக விளைச்சல் கிடைத்த நிலையில் இம்முறை 5 தொடக்கம் 7 மூடை நெல்லே விளைந்துள்ளதாக கவலை தெரிவிக்கும் விவசாயிகள் தமது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (4-5-299)

## ஆண்டு நிறைவு தின கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம் நிறுவப்பட்டு 200 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

அந்நிகழ்வுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாக்குழு தெரிவு செய்வதற்குமான கலந்துரையாடல் எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடத்த பழைய மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்குபெற விரும்பும் பழைய மாணவர்கள் தங்கள் வருகை தொடர்பாக பாடசாலை அதிபர் (077 416 8554), பழைய மாணவர் சங்க உபதலைவர் (077 055 7428), பொருளாளர் (077 617 6505) ஆகியோரிடம் தொடர்பு கொண்டு உறுதி செய்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ந.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (4-5)

## திருமறைக் கலாமன்றத்தின் இணையவழி ஆய்வரங்கம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர். அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப் படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய் நிகர் வழியில் சூம் செயலிக் கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகி ன்ற ஆய்வரங்கத் தொடரின் எட்டாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம் இளைய தம்பி தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் "ஈழத்து மரபுவழி நாடகங்களின் மேம்பாட்டிலும் பேணுகையிலும் மரியசேவியர் அடிகளாரின் வகிபங்கு" என்னும் தலைப்பில் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் ஆசிரியரும், திருமறைக் கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவருமான இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் ஆய்வினை வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 78936 44809, கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-5)

## மணவாளக் கோலம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழாவும் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் இன்று 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.(4-5-6-18)

## பாற்குட பவனி

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை குளத்தடி அருள்மிகு நாகபூஷணி அம்பாள் ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். இம் மஹோற்சவத்தில் தினமும் முற்பகல் 11 மணி முதல் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் சொற்பொழிவு இடம்பெறும்.

நாளை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாகபூஷணி அம்பாள் ஆலய பாற்குட பவனியும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-6)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேடதாரி 4 அரங்கச் சஞ்சிகை வெளியீட்டு விழா மெய்நிகர் இணைய வழியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு எழுத்தாளர் வேலணையூர் தாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது

ஆர்வலர்களை சூம் செயலி இலக்கம் 6473348261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (4-5-18)

## மனித எச்சங்கள் மீட்பு; சந்தேகத்தில் மூவர் கைது

(பனிக்கன்குளம்)

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவல்காட்டு கிராமத்தில் பாழடைந்த கிணற்றில் இருந்து கடந்த 30.12. 2020 அன்று மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

அதனடிப்படையில் சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். உயிரிழந்தவரின் மனைவி, நண்பர்கள் இருவர் உள்ளிட்ட மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதோடு அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டனர். (4-5-281)

## திறப்பு விழா

(நெளுக்குளம்)

தேசியகலை இலக்கிய பேரவையின் வவுனியா அலுவலக திறப்புவிழா நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறும்.

குடியிருப்பு வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் குறித்த அலுவலகம் திறக்கப்படவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



# மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
அன்பர்களுக்கோர் இனிய செய்தி!

*** *"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" * ***

"என்ற பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப் பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய "மனவளக்கலையை"

இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்

❖முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்பம்
❖அடுத்து வரும் அகத்தாய்வு 1...2...3... பயிற்சிகளுக்கும்

**"அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெரும் மனம்கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்..."**

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

❖உடல் நலத்திற்கு - எளியமுறை உடற்பயிற்சி
❖உயிர் வளத்திற்கு- சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
❖மனஅமைதிக்கு- தியானப் பயிற்சிகள்
❖அறிவு வல்லமைக்கு- அகத்தாய்வுப் பயிற்சிகள்
❖உறவுகள் மேம்பட- தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம் :** 22.01.2022 சனிக்கிழமை
**நேரம் :** மாலை 5:00 மணி தொடக்கம் இரவு 7:00
**பயிற்சியை வழங்குபவர்:** துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமார்,
துணைப்பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா மற்றும்
அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி,
அருள்நிதி க.ஜெயராணி

வருக வருக நலம் பெறுக பெறுக
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

**தொடர்புகளுக்கு: யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்,
இல.81, பிறவுண்வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309** (C-3592)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள ஆண்கள் விடுதி உணவகத்தை நடாத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொது நிர்வாக அலுவலகத்தில் 03.02.2022 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 07.02.2022 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல் நகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது இந்த முகவரிக்கு நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆண்கள் விடுதி உணவகத்துக்கான விண்ணப்பப் படிவம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொதுநிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அலுவலகத் தொலைபேசி இலக்கம்: 021-206 0180.

**பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C-3595)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: சூரி,8 செவ் 10 இல்
உயரம்: 6"
தகைமை/ தொழில்: A/L சொந்தத தொழில்
தொ.இ: B/6848

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: சூரி 8 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L வியாபாரம்
தொ.இ: B/6855

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: சூரி 12 செவ் 3 இல்
உயரம்: 6"
தகைமை/தொழில்: A/L சாரதி
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/6861

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 6"
கி.பா: 36 சூரி 11, செவ் 1 இல்
தகைமை/தொழில்: BSc தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: B/6875

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 15 சூரி 91 செவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/6835

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: சூரி, செவ் 9 இல் உயரம்: 148 cm
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/6836

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 58 சூரி 10 செவ் 7 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: NDT பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு விரும்பத்தக்கது.
தொ.இ:G/6858

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 72 சூரி, செவ் 7 இல் உயரம்:5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு
தொ.இ:G/6891

**கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைபேசி
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை-யாழ்ப்பாணம்
தேசிய வங்கிகளினால் நிதியளிக்கப்படும்
"100,000Km" வேலைத்திட்டம்
மீள் கேள்வி கோரல்
அலுவலக பாவனைக்கு வான் வாடகைக்கு அமர்த்தும்
கேள்வி கோரல்**

"100,000km" வேலைத்திட்ட பயன்பாட்டிற்கான வாகனம் மூடிய கேள்வி கோரல்கள் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாணம், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| விபரம் | காலம் | தேவையான வாகனங்கள் | |
|---|---|---|---|
| அலுவலக பாவனைக்கான வான் (VAN) சாரதி, எரிபொருள் உட்பட வான் உற்பத்தி திகதி (2010 ஆம் ஆண்டும் அதற்கு பிற்பட்ட ஆண்டுக்குள்) இருக்கைகள் 10 இற்கு குறையாமல் இருக்க வேண்டும். குளிரூட்டி வசதிகள் தரமானதாகவும் இருக்க வேண்டும். | 12 மாதம் | யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகம் | 1 |
| | | யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | 1 |
| | | பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | 1 |
| | | மொத்தம் | 3 |

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 24.01.2022 ஆம் திகதி முதல் 28.01.2022 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் 28.01.2022, 3.30 மணிக்கு திறக்கப்படும்.

**ஆர்வம் காட்டும் வழங்குநர்கள்**

கேள்விப்பத்திரங்கள் தயாரிப்பதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மீளச்செலுத்தப்படாத ரூ.1000.00 வற்வரி உள்ளடங்காத கட்டணத்துடன் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் 24.01.2022 ஆம் திகதி முதல் 28.01.2022 வரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதம இயந்திரி
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.**

(C-3590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கானாவில் துயரம்

# வெடிபொருட்களுடன் சென்ற லொறி வெடித்துச் சிதறியது!

- 17 பேர் உயிரிழப்பு
- 59 பேர் படுகாயம்
- சுமார் 500 கட்டடங்கள் இடிந்தன



மேற்கு கானாவில் உள்ள தங்கச் சுரங்கம் ஒன்றிற்குத் தேவையான வெடி பொருட்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வெடித்துச் சிதறியதில் 17 பேர் உயிரிழந்ததுடன் 59 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று கானா தகவல் தொடர்பு அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விபத்தில் சுமார் 500 கட்டடங்கள் இடிந்து, நொருங்கியதாக கானா பேரிடர் முகாமைத்துவ நிறுவனத்தின் தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

பொகோசோ நகருக்கு அருகில் வெடி பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மோட்டார் சைக்கிள் மீது மோதி, வெடித்துச் சிதறி தீப்பற்றி எரிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் சிதைந்த உடல்கள், உடைந்து நொருங்கிய கட்டடங்கள், வெடி விபத்தின் போது சிதறிய கழிவுகள் மற்றும் அந்தப் பகுதியில் பெரும் கரும்புகை வானத்தை நோக்கி எழும் காட்சிகளை உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. (நி-5)

## தடுப்பூசி போட்டிருந்தால் மட்டுமே உணவகங்களில் உணவு கிடைக்கும்

### போலந்தில் நடைமுறை




(வர்ஷோ)

போலந்தில் தடுப்பூசி செலுத்தியுள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்படுவதாக உணவகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம் தங்களது ஊழியர்களை கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்க முடியுமென உணவகங்கள் நம்புகின்றன.

வாடிக்கையாளர்கள் தங்கள் தடுப்பூசி சான்றிதழ்களை உணவகங்கள், அருந்தகங்கள் மற்றும் பிற இடங்களில் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுபோன்ற நடவடிக்கை தடுப்பூசி போடுபவர்களின் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்கும் என்று மருத்துவக்குழு ஆலோசகரான பேராசிரியர் ராபர்ட் ஃபிளிசியாக் தெரிவித்துள்ளார்.

போலந்தில் சுமார் 56 சதவீதம்பேர்களுக்கே கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளன. இது ஐரோப்பிய ஒன்றிய அளவில் சராசரியை விட மிகக் குறைவாகக் கருதப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவானவர்கள் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## லைபீரியாவில் கூட்ட நெரிசலில் சிக்கி 11 குழந்தைகள் உட்பட 29 பேர் பலி

(லைபீரியா)

லைபீரியாவில் திறந்த வெளி மத வழிபாட்டுக் கூட்டம் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 11 குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண் உட்பட 29 பேர் உயிரிழந்தனர்.

இந்த மத வழிபாட்டுக் கூட்டம் தலைநகரின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது ஒரு சிலர் கூட்டத்துக்குள் கத்தியுடன் நுழைந்து அச்சுறுத்தினர். இதையடுத்து அச்சம் காரணமாக அங்கு திரண்டிருந்தவர்கள் சிதறி ஓடிய போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கியே 29 பேர் உயிரிழந்தனர்.

சம்பவத்தை அடுத்து கத்தியுடன் கூட்டத்துக்குள் நுழைந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2003 இல் அதிகாரபூர்வமாக முடிவடைந்த உள்நாட்டுப் போரின் விளைவுகளை லைபீரியா இன்னும் எதிர்கொண்டு வருகிறது.

போர் முடிந்த போதும் சமீப ஆண்டுகளில் லைபீரிய நகரங்களில் சமூகவிரோத கும்பல்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

எபோலா தொற்று நோய் மற்றும் கொரோனா வைரஸ் சமூக முடக்கம் போன்ற நெருக்கடிகளால் லைபீரியா பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு வேலையின்மையும் பெரும் நெருக்கடியாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உக்ரைன் எல்லையில் படைகளை குவிக்கும் ரஷ்யா

### தொடரும் பதற்ற நிலை

(மொஸ்கோ)

உக்ரைனின் எல்லைப் பகுதியில் ரஷ்யா,இராணுவத்தை குவித்து வருவதால் பதற்றம் நிலவுகிறது.

"நேட்டோ" நாடுகள் கூட்டமைப்பில் இணைய உக்ரைன் ஆர்வமாக இருந்து வருகிறது. இதற்கு அமெரிக்கா,பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையே மோதல் வலுத்து வருகிறது.

இந்த நிலையில் சுமார் 1 இலட்சம் படைவீரர்களை உக்ரைன் எல்லையில் ரஷ்யா நிறுத்தியுள்ளது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கிடையே போர் சூழல் உருவாகி இருக்கிறது.

இந்த நிலையில் ரஷ்யாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கடுமையாக விமர்சித்துள்ளன. (நி-5)

## மக்களை வறுமையில் இருந்து மீட்க கோடீஸ்வரர்களுக்கான வரியை அதிகரியுங்கள்

### உலக கோடீஸ்வரர்கள் கோரிக்கை

(ஜெனிவா)

உலக அளவில் மக்களை வறுமையிலிருந்து மீட்க எங்களுக்கு அதிக வரி விதியுங்கள் என்று 100 இற்கும் அதிகமான கோடீஸ்வரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐரோப்பாவின் சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில், உலகப் பொருளாதார மாநாடு இந்த வாரம் நடந்தது. இதில் சர்வதேச கோடீஸ்வரர்கள் இணையவழி மூலம் கலந்து கொண்டு பேசினர். இதில் 102 கோடீஸ்வரர்கள் சார்பில் கடிதம் வெளியிடப்பட்டது.

[illegible] [illegible] தீராத துன்பத்தில் இருந்து வருகிறது. இந்தத் தொற்றுக் காலங்களில் உண்மையில் எங்களது செல்வம் உயர்வதைக் கண்டோம். பணக்காரர்களிடம் செல்வம் இருமடங்காக அதிகரித்துள்ளது.

அதேசமயம் வறுமையும், பொருளாதார ஏற்றத்தாழ்வும் உலக அளவில் அதிகரித்துள்ளன. இதற்கு தற்போதைய வரிவிதிப்பு முறை நியாயமாக இல்லாததே காரணம் என்று நாங்கள் கருதுகிறோம். செல்வந்தர்களிடம் பணம் மேலும் உயர்கின்றது. எனவே எங்களைப் போன்ற பெருங்கோடீஸ்வரர்களுக்கு அதிக வரி விதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒவ்வொரு நாடும், கோடீஸ்வரர்களுக்கு அதிக வரி விதிப்பதன் வாயிலாக ஓராண்டில் 189 இலட்சம் கோடி ரூபாய் கிடைக்கும். இத்தொகை உலக மக்கள் அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தவும் 230 கோடி பேரை வறுமையில் இருந்து மீட்கவும் உதவும்" என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரிட்டன், நோர்வே, டென்மார்க், ஆஸ்திரியா, நெதர்லாந்து, ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான கோடீஸ்வரர்கள் கையொப்பமிட்டுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் டெங்கு கட்டுப்பாட்டிற்குள்!

## சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் முதல் தற்போது வரை 20 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார்.**

வவுனியா பெரியார் குளத்தில் நேற்று முன்தினம் நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

டெங்கு நோயை பரப்புகின்ற நுளம்புகளை கட்டுப்படுத்துவதன் மூலமே டெங்கு நோயை தடுக்க முடியும்.

வவுனியா மாவட்டத்தை பொறுத்த வரை டெங்கானது கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் எமக்கு அண்மையில் உள்ள யாழ்.மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தின் வீரியம் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்விரு மாவட்டங்களிலும் கடந்த வருட ஆரம்பத்தில் டெங்கு நோயாளர்களின் பெருக்கத்தை விட இந்த ஆண்டு ஆரம்பத்தில் மிக அதிகமாகக் காணப்படுகிறது.

இதேபோன்று திருகோணமலை மாவட்டத்திலும், அதே போன்று கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது.

குறிப்பாக மேற்கூறிய மாவட்டங்களிற்கு வவுனியா மாவட்ட மக்கள் பல்வேறு தேவைகளிற்காக சென்று வர வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு சென்று வருபவர்கள் மூலமாகவே வவுனியாவில் டெங்கு நோய் தொற்றாளர்களை அடையாளம் கண்டுள்ளோம்.

கடந்த மாதத்தை பொறுத்த வரை வவுனியா மாவட்டத்தில் 09 பேரே டெங்கு நோய் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். 2022 ஜனவரி மாதம் தற்போது வரை 11 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாதம் முடிவில் குறித்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது என்று தெரிவித்தார். (4-5-299)

# தங்கம் வென்ற இந்துகாதேவிக்கு முல்லைத்தீவில் அமோக வரவேற்பு





(பனிக்கன்குளம்)

பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையில் நடைபெற்ற 2 ஆவது சவேட் குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று 25 வயதுக்குட்பட்ட 50-55 கிலோகிராம் எடைப் பிரிவில் இடம்பெற்ற குத்துச் சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கணேஸ் இந்துகாதேவிக்கு நேற்றுக் காலை மாங்குளம் கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் உள்ள தனது வீடு திரும்பும் வழியில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

தொடந்து மாங்குளம் நகருக்கு வருகை தந்த யுவதிக்கு மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பாரிய வரவேற்பு பதாகை ஒன்று வைக்கப்பட்டு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. (4-5-281)

# பசுமை விவசாயம் மூலம் மூன்றில் ஒரு பங்கே அறுவடை

(தருமபுரம்)

விவசாயிகளை நடுத்தெருவில் நிறுத்தி விட்டு வெளிநாடுகளில் இருந்து அரசாங்கம் அரிசி இறக்குமதியை மேற்கொள்கிறது என கிளிநொச்சி விவசாயிகள் தெரிவித்தனர்.

நேற்று கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பசுமை விவசாயத்தால் மூன்றில் ஒரு பங்கு அறுவடை தான் கிடைக்கிறது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் அறுவடை கிடைக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 30 ஆயிரம் தொன்னும் கிடைக்கவில்லை.

நட்டஈடு தருவதாக சொல்கின்றனர். நெல்லை கொள்வனவு செய்வதாக கூறுகின்றனர். ஆனால் இதுவரை ஒரு விவசாயிடம் கூட நெல்லை கொள்வனவு செய்யவில்லை. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றனர். அவற்றில் நச்சுத் தன்மை இல்லை என எவ்வாறு கூற முடியும்.

சேதனப் பசளை என்றால் அதற்குரிய நெல்லை அறிமுகம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லை.

இந்தியாவில் நடைபெற்றது போன்று விவசாயிகளை தற்கொலை நிலைக்குத் தள்ளாது அரசு விரைந்து நட்டஈட்டை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (4-5-316)

### பாலத்திற்குள் விழுந்த ஆட்டோ

# ஒருவர் படுகாயம்

## மற்றொருவரைக் காணவில்லை



(முறிகண்டி)

கிளிநொச்சியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி கிளிநொச்சி குளத்தின் துருசு பகுதியில் உள்ள பாலத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது.

விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவருடன் பயணித்த மற்றொருவரை காணவில்லை என சாரதியின் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் தேடும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-100)

# சதொச விற்பனை நிலையத்தில்

## அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

(குருமன்காடு)

வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசிப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாடு பூராகவும் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையங்களுக்கு செல்லும் பலரும் அத்தியாவசியப் பொருட்களை பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்புவதாக தெரிவித்தனர்.

குறிப்பாக சீனி. பால்மா மற்றும் சில அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பருப்பு மற்றும் பொன்னி அரசி என்பனவே அங்கு அதிகமாக கிடைப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (4-5-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 420 | 330 | 450 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 450 | 400 |
| தக்காளி | 180 | 140 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 | 60 |
| கோவா | 260 | 200 | 230 | 250 |
| கரட் | 320 | 420 | 430 | 400 |
| பூசணி | 120 | 100 | 130 | 160 |
| புடோல் | 240 | 200 | 180 | 250 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 230 | 280 | 100-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 220 |
| பாகற்காய் | 340 | 300 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 320 | 220 | 150 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 450 | 350 | 350 | 400 |
| லீக்ஸ் | 340 | 250 | 230 | 300 |
| பீற்றூட் | 300 | 340 | -- | 400 |
| கறிமிளகாய் | 600 | 500 | -- | 700 |
| முருங்கைக்காய் | 1200 | -- | 1200 | 800 |
| போஞ்சி | 300 | 250 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 420 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 180 | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-90 | 70-100 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 280 | 300 |
| முள்ளங்கி | 160 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 25 | 25 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 100 | 80 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2022 - 12.02.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்!



**எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் ஆற்றல் பெற்ற கும்ப இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரயச் சனியாக சஞ்சரிக்கிறார். எனவே விரயங்கள் கூடும். அதே நேரத்தில் தன-லாபாதிபதியான குரு பகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் தேவைக்கேற்ப வரவு வந்து சேரும்.

**சூரியன் - சனி சேர்க்கை**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தான்த்தில் சூரியனும் சனியும் சஞ்சரிக்கிறார்கள். சூரியன்-சனி இணைந்து சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்திற்கு அதிபதி சூரியன். அவர் பகைக் கிரகத்தோடு சேரும் பொழுது பயணங்களால் விரயம் ஏற்படும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிவடையாது.

அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். எனவே பல காரியங்கள் தடைப்படலாம். குடும்பத்தில் அமைதி குறையும். கடன் சுமை கூடும்.

**புத சுக்கிர யோகம்**

உங்கள் இராசியைப் பொறுத்தவரை லாப ஸ்தானத்தில் புதனும் சுக்கிரனும் கூடியிருக்கிறார்கள். இதனால் 'புத சுக்கிர யோகம்' ஏற்படுகிறது. உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன். 4 மற்றும் 9 இற்கும் அதிபதியானவர் சுக்கிரன். 9 இற்கு அதிபதி 11 இல் வரும் பொழுது, பொன் - பொருள் சேர்க்கை உண்டாகும். புதிய முயற்சிகளும் ஆபரணங்கள் வாங்கும் முயற்சியும் கைகூடும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வரலாம்.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

தை மாதம் 4 ஆம் திகதி தனுசு இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம், மிகுந்த நன்மை தரும் நேரமாகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். வீடு கட்டும் அல்லது வீடு வாங்கும் முயற்சியில் அக்கறை காட்டுவீர்கள். உடன்பிறப்புகள் உதவியாக இருப்பர். கல்யாணக்




கனவுகள் நனவாகலாம். வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனத்தில் இருந்து அழைப்பு வரலாம்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 8 இற்கு அதிபதி புதன் 12 இல் சஞ்சரிக்கும் பொழுது, 'விபரீத இராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உங்கள் திறமை பளிச்சிடும். திடீர் முன்னேற்றம் காண்பீர்கள். தொழில் போட்டிகள் அகலும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். பயணங்கள் பலன்தரும். அரைகுறையாக நின்ற காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். இம்மாதம் தென்முகக் கடவுள் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பற்றாக்குறை அகலும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் பெருகும். பிள்ளைகளின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். புதிய பங்குதாரர்கள் தொழிலில் வந்திணையும் வாய்ப்பு உண்டு. பூமி யோகம் வாய்க்கும்.

பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் எளிதில் கிடைக்கும். மாதத்தின் பிற்பாதியில் மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும்.

## அதிகார வர்க்கத்தின் ஆதரவு குறையும்!



**இரகசியங்களை காப்பாற்றும் வல்லமை படைத்த மீன இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். லாப ஸ்தானத்தில் லாபாதிபதி சனியோடு சூரியன் இணைந்திருப்பதால் விரயம் கூடும். சனியின் பார்வையால் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்தில் பகைக் கிரகங்கள் சூரியன் - சனி சேர்ந்திருக்கின்றன. இதனால் உத்தியோகத்தில் பாதிப்புகள் அதிகரிக்கலாம். வேலையில் இருந்து ஓய்வு பெறுவது பற்றி சிந்திப்பீர்கள். கடன் சுமை அதிகரிக்கும். அதிகார வர்க்கத்தின் ஆதரவு குறையும். சனி உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குவதால் தொழிலில் இலாபம் வரும் என்றாலும் திருப்தியாக இருக்காது. புதிய ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லலாம். தடை, தாமதம் வரும் இதுபோன்ற காலங்களில் தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**புத சுக்கிர யோகம்**

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அதேபோல் 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன்.

இந்த இரண்டு கிரகங்களுக்கு உங்கள் இராசிக்கு தொழில் ஸ்தானத்தில் சேர்ந்திருக்கின்றன. இந்தக் கால கட்டத்தில் வாழ்க்கைத் துணைக்கு வேலைக்கான முயற்சி செய்திருந்தால் அது கிடைக்கப் பெறலாம். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

**தனுசு - செவ்வாய் சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், தை 4 ஆம் திகதி தொழில் ஸ்தானத்திற்கு வருகிறார். எனவே புதிய தொழில் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய




தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் அமைப்பு ஏற்படலாம்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். எனவே லாப ஸ்தானத்தில் வரும் புதன், அங்கு சூரியனோடு இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தை உருவாக்குகிறார்.

எனவே படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் பலன் உண்டு. தாய்வழி ஆதரவு கிடைக்கும். வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் எண்ணம் கைகூடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். கூட்டு முயற்சியில் இருந்து விடுபட்டு தனித்து இயங்கி சம்பாதிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்படும். இம்மாதம் கற்பக விநாயகர் வழிபாடு கனவுகளை நனவாக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். உறவினர் பகை உருவாகலாம்.

கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுங்கள். குழந்தைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். அவர்களை கண்காணித்துக் கொள்வது உகந்தது. பிறரிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் இருப்பதே நல்லது. எதிலும் கவனம் தேவை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மை நிலவரத்தை சொல்லி இருந்தால்

# புலிகளிடம் இருந்து தப்பித்திருக்க முடியாது

## ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்



(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடன் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் சில தினங்கள் ஆயுதங்கள் இல்லாத நிலையும் காணப்பட்டிருந்தது. அவற்றை ஊடகங்களுக்கு அன்று சொல்லியிருந்தால், விடுதலைப் புலிகள் அன்றே எமக்கு அடித்திருப்பார்கள்.**

ஆகவே எல்லாவற்றையும் வெளியில் சொல்ல முடியாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை அவர் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"எரிபொருளை நீண்ட நாட்களுக்கு சேமித்து வைத்திருப்பதற்கு தேவையான இடவசதிகள் இல்லை. அதனால் தொடர்ந்தும் இறக்குமதி செய்தே விநியோகிக்க வேண்டும்.

உணவுப் பொருள் இல்லை, எரிபொருள் தட்டுப்பாடு என்று எண்ணிக் குழப்பம் அடையத் தேவையில்லை. அதனை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

இறக்குமதியாளர்கள் நாட்டு மக்களுக்கு அவசியமான உணவு, மருந்துப் பொருட்கள், எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். அதற்கான டொலர் வழங்கப்படும்.

தேவையற்ற பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்துவதன் மூலம் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுகாதாரப் பாதுகாப்பு படு மோசம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுகாதாரப் பாதுகாப்பு நிலைமை மிகவும் வருத்தமளிப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தில் பணிபுரியும் பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் 6 பேருக்கு கொவிட் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பில் சுகாதார பிரிவுகளிடம் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் பெரிதாக ஒருவரும் கண்டுகொள்ளவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வரும் வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையர்கள் சுகாதாரப் பாதுகாப்பை மீறி செயற்படுகின்றார்கள்.

முகக்கவசம் அணிவதில்லை. அத்துடன் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஓய்வுபெற அறையில்லாத நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றும் சுகாதார பரிசோதகர்கள் அனைவரும் கடமையில் இருந்து விலக வேண்டிய நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# துறைமுக நகரத்தில் புகைப்படம் எடுக்க கட்டணம் அறவிடப்படும்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தில் புகைப்படம் மற்றும் காணொளி எடுக்க கட்டணம் வசூலிக்கப்படும் என கொழும்பு துறைமுக நகர நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய தனியார் மற்றும் வணிக ரீதியிலான இரு பிரிவுகளின் கீழ் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பிரிவில் இரண்டு முதல் ஐந்து பேருக்கு 30,000 ரூபாவும் ஆறு முதல் பத்துப் பேருக்கு 50,000 ரூபாவும் 10 பேருக்கு மேல் என்றால் கட்டணம் அதிகரிக்கும் எனவும் துறைமுக நகர நிறுவனம் தெரிவித்துள்ளது.

வணிகப்பிரிவில் 10 பேருக்கும் குறைவான நபர்களுக்கு 100,000 ரூபாவும் மற்றும் 10 பேருக்கு மேல் இருந்தால் கட்டணம் மாறுபடும் எனவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த இரண்டு பிரிவினருக்கும் ஒரேநேரத்தில் மூன்று மணி நேரம் வழங்கப்படும் என துறைமுக நகர நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

துறைமுக நகரின் நடைபாதை சில தினங்களுக்கு முன்னர் மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த நகரை பார்க்க பெருமளவு மக்கள் படையெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இலங்கைக்கான விமான சேவையை நிறுத்தும் வெளிநாட்டு விமான நிறுவனம்

(கொழும்பு)

இலங்கைக்கான விமான சேவைகளை இடைநிறுத்த குவைத் ஏர்வேஸ் தீர்மானித்துள்ளதாக அரப் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளூர் முகவர் அமைப்புகள் நிலுவைத் தொகையை செலுத்தாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கையில் நிலவும் டொலர் நெருக்கடியே இதற்கு காரணம் எனவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து, குவைத் ஏர்வேஸ் இலங்கைக்கான விமான சேவைகளை வாரத்திற்கு ஒரு விமானமாக மட்டுமே மட்டுப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கான விமான சேவையை நடத்துவதற்கான செலவை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

# திஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்திற்கு 10,000 மெற்றிக் தொன் டீசல்

(கொழும்பு)

வாக்குறுதியளித்தவாறு 10,000 மெற்றிக் தொன் டீசலை களனி திஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்திற்கு வழங்க கனியவளக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் இரவு குறித்த எரிபொருள் களனி திஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்திற்கு கிடைத்ததாக அதன் பிரதான பொறியியலாளர் தெரிவித்தார். (நி-5)

# இராசிபலன்

22.01.2022
தை 09, சனிக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.24 மணிவரை
பூரம் முற்பகல் 9.57 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சந்திராஷ்டமம்: அவிட்டம்

வளவன்

**மேஷம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்**
நன்மைகள் நடைபெறும் நாள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பச் சுமை கூடும் நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி**
விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கலகலப்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு**
தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.

**மகரம்**
மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையலாம், பொறுமையால் பெருமை காணும் நாள், எடுத்த காரியங்கள் தாமதமாகும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்**
கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்த வர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.

நீ மனிதர்களோடு பேசும் அளவுக்கு கடவுளோடும் பேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் சீடர்கள்



இறந்து போன புலியின் முன்பாக அமர்ந்து புத்திசாலியான சீடன் மந்திர உச்சாடனம் செய்யத் தொடங்கினான்.

மற்றவர்கள் மரங்களின் உச்சியில் ஏறி பதுங்கத் தொடங்கினார்கள்.

மிக முக்கியமான மிருத்யும்ஜெய மந்திரத்தை உச்சரித்தான். முதலில் ஒன்றும் நிகழவில்லை.

மெல்ல மெல்ல புலியின் சுவாசம் கேட்டது. புலி கண்களைத் திறந்தது. தனக்கு முன் ஒரு மனிதன் தாவிக் குதிப்பதையும் கண்டது.

புலி பாய்ந்து சீடனைத் தாக்கிக் கொன்றது.

சிறிது நேரம் சென்ற பின் மற்ற சீடர்கள் இறங்கி வந்து இறந்த சீடனைத் தூக்கிக் கொண்டு குருவின் இருப்பிடம் சென்றார்கள்.

**முனிவர்:** என்ன ஆயிற்று இவனுக்கு.

**சீடன் உ:** குருவே இறந்த புலிக்கு உயிர் கொடுத்தான். அவன் அந்தப் புலி அடித்து மாண்டான்.

உயிர் கொடுக்கும் மந்திரத்தை முனிவர் சொல்ல சீடன் உயிர் பெற்று எழுந்தான்.

**சீடன்-1:** குருவே என்னை மன்னியுங்கள்.

**முனிவர்:** சீடனே சக்தியை தவறாக பயன்படுத்தினால் உண்டாகும் விளைவை அறிந்தாயா?

**சீடன் - உ:** உணர்ந்தேன். இனி எப்போதும் நல்லவற்றுக்கே பயன்படுத்துவேன்.

**முனிவர்:** இது உங்கள் எல்லோருக்கும் ஒரு பாட மாக இருக்கட்டும். இப்போது இந்த மந்திரத்தை எல்லோருக்கும் கற்றுத் தருகின்றேன்.

மந்திரத்தைக் கற்றுத் தந்த முனிவர் எல்லோரையும் நன்மை செய்ய உலகிற்கு அனுப்பி வைத்தார்.

நிச்சயம் தவறு செய்ய மாட்டார்கள். சீடர்கள் அறிவோடு செயலாற்றுவார்கள் என்று உறுதியாக நம்பினார்.

குழந்தைகளே பார்த்தீர்களா எப்பொழுதெல்லாம் நீங்கள் சக்தி படைத்தவர்களாக இருக்கின்றீர்களோ அறிவுடன் செய லாற்றுங்கள்.

தன்னிச்சையாக செயற்படாமல் பெரியோர் அறிவுரையைக் கேட்டு நடந்து கொள்ளுங்கள். உங்கள் சக்தியை ஆக்க பூர்வமாக செலவழியுங்கள்.

ஒரு போதும் தீய செயல்களை செய்ய உங்கள் சக்தியை உபயோகப்படுத்தாதீர்கள். இதுவே இந்த கதையின் நீதியாகும்.

(முற்றும்)

---

# மகாபாரதம்



நான்கு லோக பாலகர்களுக்கு இடையில் பிரம்ம தேவன் இருப்பது போலப் பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் சூழ்ந்திருக்க தருமன் உங்களை நன்கு பாது காப்பான்.

பெரியோர்களே! உங்களிடம் இன் னொன்றையும் வேண்டுகிறேன். நான் பெற்ற மைந்தரில் விகர்ணனைத் தவிர மற்றவர்கள் அறிவுத் தெளிவற்றவர்கள். சுயநலம் மிக்கவர்கள்.

அவர்களால் உங்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்திருக்குமேயாயின் அவர்களை மன்னித்து விடுங்கள்.

எங்கள் இறுதிக் காலத்தில் நாங்கள் மேற்கொள்ளவிருக்கும் தவ வாழ்க்கைக்கு நீங்களும் அனுமதி கொடுங்கள்"என்றான்.

கண் இழந்த மன்னன் பேசியதைக் கேட்டு மக் கள் உள்ளம் உருகினர். கண்ணீர் விட்டனர்.

ஒன்றும் பேசாது, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டனர். கை குவித்து வணங்கிப் பிரியா விடை அளித்தனர்.

திருதராட்டினையும், காந்தாரியுயையும் பின் தொடர்ந்து குந்தியும், விதுரரும், சஞ்சயனும் கானகம் சென்றனர். நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையை அவர்கள் அறவே மறந்தனர்.

மறுமை இன்பத்தை வேண்டி நின்றனர். துன்பம் நிறைந்த உலக வாழ்க்கையை நீத்த அவர்கள் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்னும் மேலுலக வாழ்க்கையைப் பெற மூன்றாண்டுகள் துறவு மேற் கொண்டு தியானம், தவம் ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

அப்போது ஒரு சமயம் காட்டுத்தீ எங்கும் பரவியது.தியானத்தில் இருந்த திருதராட்டினன், காந்தாரி, குந்தியை அத்தீ இரையாக்கிக் கொண்டது.

அவர்கள் உடல்கள் வெந்து கரிந்து சாம்பலாயின.ஆனால் அவர்கள் உயிர்கள் சோதி வடிவ மாய் மேலுலகம் நோக் கிச் சென்றன.

காட்டித் தீ விதுரரையும், சஞ்சயனையும் பாதிக்கவில்லை. அவர்கள் தியானத்தை மேற் கொள்ள இமயமலையை நோக்கிச் சென்றனர்.

பின் சில காலம் வாழ்ந்த இவர்களது சீரிய வாழ்வு ஊழிக் காலம் போற்றும் வண்ணம் முடிவுற்றது.

**மௌசல பருவம் - உலக்கையால் மாண்டது**

பாரதப் போர் முடிந்து முப்பத்தாறு ஆண்டுகள் ஆயின.

குரு வம்சம் அழிந்ததைப் போலக் கண்ணனின் விருஷ்ணி வம்சமும் அழியும் காலம் வந்தது.

அதனை அறிவிப்பது போலத் துர்நிமித்தங்கள் பல தோன்றின. புழுதிக் காற்று உலகையே மூடிவிட்டது போல தோற்றம் அளித்தது.

விண்ணிலிருந்து நட் சத்திரங்கள் கரிக்கட்டையாய் விழுந்தன.

சூரியன் ஒளி குன்றியவனாய்த் தெரிந்தான். எங்கும் குழப்பமும், அச்சமுமாய் இருந் தது.

ஆடம்பரமும் தற்பெருமையும் கொண்ட விருஷ்ணிக ளின் வீழ்ச்சி நெருங்கி விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான விஷயங்களை உணர்ச்சியின்றிக் கையாளும் வேஷதாரிகளே பெரிய நாத்திகர்கள். அவர்களுக்கு இறுதியில் சூடு போடுதல் அவசியம்.
– பேக்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகாநாயக்கர்கள் கீறிய கோட்டைத் தாண்டமுடியாத அரசியல்...

ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணியை விட்டு வெளியேறுவதா? இல்லையா? என்ற சிக்கலில் இருந்து மீள முடியாத நிலையில் கூட்டணி அரசியல் கட்சிகள் உள்ளன.

ஆளுங்கூட்டணிக்குள் பலத்த கருத்து மோதல்கள் எழுந்துள்ளன என்பது அனைவரும் அறிந்ததே.

அந்த அடிப்படையிலேயே சுசில் பிரேம ஜயந்தவின் அமைச்சுப் பதவியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பறித்து அவரை உத றித் தள்ளினார்.

தவிர, அரசாங்கம் கவிழப்போகிறது. ஆனால் அது எப்போது என்று கூறமுடியாதென அமைச்சர் விமல் வீரவன்ஸவும் கூறியிருந்தார்.

ஆக, ஆளும் கூட்டணிக்குள் பலத்த முரண்பாடுகள் ஏற்பட்டு, கூட்டணி உடைகின்ற கட்டத்துக்கு வந்துவிட்டதென்பது நிறுதிட்டமான உண்மை.

எனினும் ஆளுங்கூட்டணியை உடைத்துக் கொண்டு வெளியேறுவதற்கு எவரும் தயாரில்லை.

உண்மையில், ஆளுங்கூட்டணியில் இருந்து வெளியேறுகின்ற பலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே உண்டு.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்குத் தயாராக இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது ஆளுங்கூட்டணியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறினால், அதனைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளும் கூட்டணியைவிட்டு வெளியேறும். அவ்வாறு வெளியேறினால் அரசாங்கம் கவிழ்ந்து விடும்.

அரசாங்கம் கவிழ்ந்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ற அதிகாரத் தலைமைக்கு எந்தப் பழுதும் வரப்போவதில்லை.

இந்தநிலையில் அரசாங்கத்தைக் கவிழ்த்த குற்றச்சாட்டுக்குத் தான் ஆளாக வேண்டி வரும். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு நடந்த கதியே தனக்கும் நடக்கும் என்பது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்கு தெரியும்.

இந்தநிலையில் ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேறுவதாக இருந்தால், அதற்கு பௌத்த பீடங்களின் ஆதரவும் ஆசியும் தேவை.

பௌத்த பீடாதிபதிகளின் ஆசியுடன் ஆளுங் கூட்டணியில் இருந்து வெளியேறினால், அது தன்னைக் காபந்து பண்ணும் என்பது மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடு. இதன் காரணமாகவே மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பௌத்த பீடாதிபதிகளை விரைவில் சந்திக்கவுள்ளது.

இந்தச் சந்திப்பில் பௌத்த பீடாதிபதிகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்று கேட்டால்; அரசாங்கத்தைக் கவிழ்த்து விடாதீர்கள் – அவசரப்படாதீர்கள் என்பதாகவே பௌத்த பீடாதிபதிகள் ஓதி வைப்பர்.

இதன்பின் மைத்திரி அமைதி கொள்வார். அதனூடு அவரின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.

இவையெல்லாம் நடக்கக்கூடியவை என்பது அனைவருக்கும் தெரியுமென்றாலும் பௌத்த பீடாதிபதிகளின் அதிகார வல்லமையை – அவர்கள் கீறிய கோட்டைத் தாண்ட முடியாத அளவில் சிங்கள அரசியல் கட்சிகளை அவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை எங்கள் தமிழ்த் தரப்புகள் ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

# யாழ். போதனாவில் குருதிக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதியின் கையிருப்பு கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

இதனால், நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் தற்போதிருக்கும் குருதி இன்னும் 5 நாட்களுக்கு மட்டுமே போதுமானது. இது ஆபத்தான நிலையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

நீண்ட விடுமுறை வந்த காரணத்தினாலும், கோவிட்-19 இற்கான பூஸ்டர் தடுப்பூசியாகப் பைசர் போடப்படுவதினாலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன் இரத்ததான முகாம்களையும் ஏற்பாடு செய்ய முடியவில்லை. இந்நிலையில் நடைபெற்ற இரத்ததான முகாம்களில் குறைந்தளவு எண்ணிக்கையான குருதிக் கொடையாளர்களே இரத்ததானம் செய்துள்ளனர். இதன்காரணமாக, இரத்த வங்கியில் குருதியின் கையிருப்பு கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

இதனால், நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியவில்லை. இரத்த வங்கியின் இன்றைய (நேற்று) கையிருப்பு 185 பைந்தாகும். நாளொன்றிற்கு 35 - 40 பைந்த் குருதி எமது இரத்த வங்கியால் விநியோகிக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் தற்போதிருக்கும் குருதிக் கையிருப்பு இன்னும் 5 நாட்களுக்கு மட்டுமே போதுமானது. இது ஆபத்தான நிலையாகும்.

ஆனால், எமது இரத்த வங்கியிலிருக்க வேண்டிய கையிருப்பு 330 பைந்தாகும். இந்த ஆபத்தான நிலையைத் தவிர்ப்பதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றோம் எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-18)

# கிளிநொச்சியில் விபத்து; சாரதி படுகாயம்

## பரிசோதனையில் கோவிட் உறுதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுக் காலை இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில், அவருக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்றும் உறுதியாகியுள்ளது.

பேருந்து ஒன்றுக்கு இடம்கொடுக்க முற்பட்ட போது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில். முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி குளத்தின் துருசு பகுதியிலுள்ள பாலத்தில் விழுந்துள்ளது.

இந்நிலையில் விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டிச் சாரதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி உதய நகர் மேற்குப் பகுதியைச் சேர்ந்த தியாகராசா சிவநாதன் என்ற 54 வயதுடையவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

இவரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்படு முன் எடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவருடன் பயணித்த மற்றொருவரை காணவில்லை என சாரதியின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 23 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** கொடிகாமம் 53 ஆம் பிரிவு இராணுவ முகாம், அல்லாலை, கச்சாய், கொடிகாமம் பேருந்து நிலையம், மீசாலை, கொடிகாமம், கரம்பைக் குறிச்சி, கரம்பன், வரணி, கெற்பேலி கொடிகாமம் பொலிஸ் நிலையம், குடமியன், மந்துவில், மிருசுவில், நாவற்காடு, புத்தூர் சந்தி, தாவளை, இயற்றாலை, வாகையடிச் சந்தி, வாழைத்தோட்டம், வெள்ளாம்போக்கட்டி, சி.எஸ்.என். நாயன்மார்கட்டு, பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம், மின்சார சபை, டீசல் மற்றும் மோட்டார் பொறியியல் பி.எல்.சி- அரியாலை, நல்லூர் பிரதேச செயலகம், கல்வி அமைச்சு, ஆளுநர் விடுதி, ஸ்டான்லி கல்லூரி, யாழ். மாவட்ட செயலகம், யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், SOS சிறுவர் கிராமம், துளசி மஹால், யு.எஸ்.விடுதி, அரியாலை, செட்டித்தெரு நல்லூர், மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம், கிளிகடை சந்தி, மாம்பழம் சந்தி, முலவை, முள்ளி, நாவலடி, நாவலர் வீதி, நாயன்மார்வீதி, நாயன்மார்கட்டு செம்மணி வீதி, பூம்புகார், சட்டநாதர் வீதி, கோயில் வீதி சங்கிலியன் வீதிச் சந்தி, திருமகள் வீதி, முகாமைத்துவ பீடம், பால்பண்ணை- கலாசாலை வீதி, ஆடிய பாதம் வீதி, ஞான பாஸ்கரோதயா வீதி, இலங்க நாயகி, கட்டப்பிராய், இருபாலை, கோப்பாய், மாதாகோவில், நாவலடி, கோப்பாய் பயிற்சி கல்லூரி, பால்பண்ணை சந்தி இராஜவீதி, பூதர் மடம் கோப்பாய், இராமலிங்கம், ஆடியபாதம் சந்தி, வசந்தபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வெற்றிக்கு வழி என்ன?

❖ குறிக்கோளில் செலுத்தும் கவனத்தை போலவே, அதை அடையும் பாதையிலும் கருத்தைச் செலுத்துங்கள்.

❖ ஒவ்வொரு உயிரிலும் உறைந்திருக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வருவது தான் நம் வாழ்வின் லட்சியம்.

❖ தன்னை அடக்கியாளப் பழகியவன் ஒருபோதும் புற உலக விஷயங்களுக்கு அடிமையாக மாட்டான். அத்தகையவனே உலகில் வாழத் தகுதி படைத்தவன் ஆகிறான்.

❖ ஒருவன் நெருப்பில் கூட தூங்க முடியும். ஆனால், வறுமை நிலையிலோ கணப்பொழுதும் கண்மூடித் தூங்க முடியாது.

❖ மனமும், உடலும் ஒருமித்து இருக்கும் போது எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதில் வெற்றியே கிடைக்கும்.

❖ [illegible] நிறைவேற்றும்போது இடையூறுகள் குறுக்கிடவே [illegible] தொடர்ந்து முயற்சியுங்கள்.

❖ பசியால் நலிந்து வாடும் ஏழைகளிடம் ஆன்மிகம் பேசுவது அவர்களை அவமதிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

59

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**4. பெய்தல் அளவை**

நெல் முதலியவற்றை படி, மரக்கால்களில் சொரிந்து அளப்பது பெய்தல் அளவை ஆகும்.

**5. நீட்டலளவை**

விரல், சாண், முழம் என நீளத்தை கை அல்லது கோல்களால் அளப்பது நீட்டல் அளவை ஆகும்.

**6. தெறிப்பு அளவை**

நொடி, நாழிகை, நாளெனக் காலத்தைக் கணிப்பது தெறிப்பு அளவை ஆகும்.

**7. சார்த்தல் அளவை**

சுரம், ஒலி, நிறம், உரு முதலியவற்றைக் கூறி "இப்படி", "அதைப் போல" என்று ஒப்பிட்டு அளப்பது சார்த்தல் அளவை ஆகும்.

இவைபற்றி விரிவாக தற்போது பார்ப்போம்.

**எண்ணலளவை**

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற தொடரினைப் பார்க்கும் போது எண் வேறு, எழுத்து வேறு என்பதை அறியக் கூடியதாக உள்ளது. அதைவிட எழுத்தினைவிடவும் எண்ணே முதலில் தோன்றியது என்ற எண்ணத்திற்கும் வகை செய்கிறது.

எண்ணல் அளவை தொடர்பான எண்ணங்களை தொல்காப்பியத்தினின்றும் அறிய வருகின்ற போதும் முதலில் இவ்வெண்கள் எவ்வாறு தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என்பதனைத் தமிழர் வரலாற்றினின்றும் புரிந்து கொள்ள இயலவில்லையென "தமிழர் அளவைகள்", என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

பண்டைய காலத்தில் சுவரில் கோடிட்டு எண்ணும் முறை இருந்தது. இன்றும் சில இடங்களில் மகளிர் பால் கணக்கு எழுதல் போன்ற சில நிலைகளில் சுவரில் கோடு கிழித்து இறுதியில் எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காண்கின்றோம். பழைமையைக் காட்டக்கூடியவை மாந்தர் பண்டு தொட்டே எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காட்டவல்லன.

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற தொடரினைப் பார்க்கும் போது எண் வேறு, எழுத்து வேறு என்பதை அறியக்கூடியதாக உள்ளது. அதைவிட எழுத்தை விடவும் எண்ணே முதலில் தோன்றியது என்ற எண்ணத்திற்கும் வகை செய்கிறது.**

சுவரில் கோடிடும் வழக்கங்களைச் சுட்டும் சில சங்கப் பாடல்கள் kuralthiran.com என்னும் இணையத்தில் இருந்தன. அவை இங்கு தரப்படுகின்றன.

**பண்டைய காலத்தில் சுவரில் கோடிட்டு எண்ணும் முறை இருந்தது. இன்றும் சில இடங்களில் மகளிர் பால் கணக்கு எழுதல் போன்ற சில நிலைகளில் சுவரில் கோடு கிழித்து இறுதியில் எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காண்கிறோம்.**

"நெடும ணிஞ்சி நீணகர் வரைப்பினோவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச்செவ்விரல் சிவந்த வவ்வரிக் குடைச்சூலணங் கெழிலரிவையர்" -(பதிற்றுப்பத்து-68: 16-19.)

இதன் பொருள் உயர்ந்த. மண்ணால் செய்யப்பட்ட மதிலையுடைய நீண்ட அரண்மனையின் எல்லையில் சித்திரத்தை ஒத்த அழகையுடைய உயர்ந்த சுவரில் தலைவன் பிரிந்து சென்ற நாட்களைக் கோடிட்டு எழுதி. இயல்பாகச் சிவந்த விரல் பின்னும் சிவந்த. அழகிய வரிகளையுடைய சிலம்பையணிந்த நோக்கினாரை வருத்துகின்ற அழகையுடைய மகளிரை வசப்படுத்துகின்ற..

"வீங்கிழை நெகிழ விம்மி யிங்கேஎற்கட் பேதுறல் ஆய்கோடு இட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்" (குறுந்தொகை 358).

இதன் பொருள் செறிந்திருந்த அணிகலன்கள் நெகிழும்படி. அழுது. இவ்வாறு நீர்த்துளிகளை வெளிவிடும் கண்ணோடு மயங்கற்க; ஆராய்கின்ற கோடுகளைக் கிழித்து. சுவரினிடத்தைப் பற்றி நிற்கும் நினது துன்பம்....

"சேண் உறை புலம்பின் நாள் முறை இழைத்ததீன் சுவர் நோக்கி நினைந்து கண் பனி
நெகிழ்நூல் முத்தின் முகிழ் முலைத் தெறிப்ப" (அகநானூறு 289 9-11).

இதன் பொருள்: நாம் சேய்மைக்கண் உறையும் தனிமையால் நாடோறும் முறை முறையாகக் கோடிட்டு வந்த திண்ணிய சுவரினைப் பார்த்து உடனுறையப் பெறாமையை நினைந்து கண்ணீர் நூலற்று உதிரும் முத்துக்களைப்போல முகிழ்த்த முலைமீது தெறித்து விழ...

திருக்குறளில் வரும் "நாள் ஒற்றித் தேய்ந்த விரல்" என்ற பகுதிக்கு நாட்களைத் தொட்டுத் தேய்ந்து விட்டன விரல்கள் என்பது பொருள். காதலர் வரும் வழி பார்த்துக் கண்களும் ஒளியிழந்து பொலிவு குறைந்தன; அவர் போன நாட்களைச் சுவரில் தொட்டு எண்ணியெண்ணி விரல்கள் தேய்ந்தன என்பது இக் குறட்கருத்து.

எனவே கோடு கிழித்து எண்ணும் நிலைக்கு முன்னதாக எண்களைப் பற்றிய அறிவினை இவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பது திண்ணம். முதலில் ஒவ்வொன்றாக எண்ணி அளவிடத் தொடங்கிய பின்னர் ஒன்றுக்குக் குறைவாகவும் காணத் தொடங்கினர். அவை பின்னங்கள் என அழைக்கப்பட்டன. இப்பின்னங்கள் பற்றி முன்னர் தெளிவாகவும் விபரமாகவும் பார்த்துள்ளோம்.

பின்ன எண்களில் ¼ , ½ , ¾ என்பன பயன்பாட்டு நிலையில் முக்கிய இடம்பெறுகின்றன. மற்றைய பின்ன எண்கள் குறைந்த அளவிலேயே பயன்பாட்டில் உள்ளன. இவ்வெண்களுள் முந்திரி (1/320), காணி (1/80) மற்றும் மா (1/20) முதலியவற்றை நீட்டல் அளவாகவும் வீசம் (1/16) என்பதனை முகத்தல் அளவாகவும் பயன்படுத்தும் நிலை காரணமாக இவை செல்வாக்குப் பெற்ற ஏண்களாக அமைகின்றன. பொதுவாக மற்றைய பின்னங்கள் பயன்பாட்டில் இல்லையென்றே கூறலாம்.

**பின்ன எண்களில் ¼ , ½ , ¾ என்பன பயன்பாட்டு நிலையில் முக்கிய இடம்பெறுகின்றன. மற்றைய பின்ன எண்கள் குறைந்த அளவிலேயே பயன்பாட்டில் உள்ளன. இவ்வெண்களுள் முந்திரி (1/320), காணி (1/80) மற்றும் மா (1/20) முதலியவற்றை நீட்டல் அளவாகவும், வீசம் (1/16) என்பதனை முகத்தல் அளவாகவும் பயன்படுத்தும் நிலை காரணமாக இவை செல்வாக்குப் பெற்ற எண்களாக அமைகின்றன.**

பின்ன எண்களான முந்திரி, மா, காணி, அரை, கால் என்பவற்றுக்கான தமிழ் எண்கள், பின்ன எண்கள் I, பின்ன எண்கள் II, பின்ன எண்கள் III ஆகிய அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

ஔவையாரின் தனிப் பாடலில் அமையும் "எட்டேகால் லட்சணமே" என்ற தொடர் 'அவலட்சணம்' என்ற பொருள் குறிக்க எழுந்தது. இத்தொடர் எண்ணுப் பெயரை எழுத்தால் குறிக்கும் நிலையில் அமைந்தது. அதாவது 'அவலட்சணம்' என்ற சொல்லில் உள்ள 'வ' என்பது ¼ இற்குரிய தமிழ் எண்ணாகும். 'அ' என்பது எட்டுக்குரிய தமிழ் எண். ஒன்று தொடங்கி கோடி வரையிலும் உள்ள எண்கள் பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம், இலட்சம், பத்து இலட்சம், கோடி என இன்றைய நிலையில் எண்ணப்படுகின்றன. கோடிக்கு மேல் உள்ள எண்களைத் தொல்காப்பியர் அல்பெயர் எண் என்று குறிப்பிடுகிறார். எண்ணிக்கை அளவைக் குறிப்பிடுவது எண். அளவு காட்டாமல் மிகுதியைக் குறிப்பிடும் எண்ணுப்பெயர்களும் (பல எண்கள் பழக்கத்தில் இருந்திருக்கின்றன. அவற்றை எண்ணால் குறிக்காமல் எழுத்தால் குறித்துள்ளனர்). தமிழில் இருந்தன.

அவற்றைத்தான் தொல்காப்பியர் "அல்பெயர் எண்" என்று குறிப்பிடுகிறார். தாமரை, வெள்ளம், ஆம்பல், சங்கம், கமலம் போன்ற எண்ணுப் பெயர்களை அங்கு காண்கிறோம். பழந்தமிழ் இலக்கியங்களில் பல பாடல்களில் இப்பெயர்கள் வருவதைக் காண்கின்றோம். இப்பெயர்கள் அனைத்தையும் ஒரே பாடலில் பரிபாடல் தருகிறது. அப்பாடல் இங்கு தரப்படுகிறது.

உள்ளீடு ஆகிய இரு நிலத் தாழியும், நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும், மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய, செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை (பரி 2:12-15). இவ்வாறு பரி பாடலில் வருகிறது.

'இலட்சம்' என்று இன்று சுட்டும் அளவு அன்று நூறாயிரம் என வழங்கப்பட்டது எனத் தெரிகிறது. பெருஞ்சேரல் இரும்பொறை தன் வெற்றியைப்பாடிய அரிசில் கிழாருக்கு, ஒன்பது நூறாயிரம் காணம் பொன் தந்த நிலையினையும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் காக்கைப் பாடினியாருக்கு நூறாயிரம் காணம் பொன் தந்த நிலையினையும், பட்டினப்பாலை நூலாசிரியர் உத்திரங் கண்ணனார் பதினாறு நூறாயிரம் காணம் பொன் தந்த நிலையினையும், காண இச்சொல் வழக்குப் புலனாகிறது. இன்று இவ்வழக்கு மறைய இலட்சம் செல்வாக்குடன் திகழ்வதைக் காண்கிறோம். இவ்வாறு "தமிழர்கள் அளவை" நூலில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஆறுமுகநாவலரின் "பாலபாடம்" என்னும் நூலில் அஃப எண்களின் பெயர்கள் பாவிக்கப்படவில்லை. அவரின். நூலில் இலட்சம், பத்து இலட்சம், கோடி, பத்துக் கோடி, நூறு கோடி, ஆயிரம் கோடி, பதினாயிரம் கோடி, இலட்சகோடி, பத்து இலட்சகோடி, மகாகோடி என்றே எழுதப்பட்டுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 பேர்...

என.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,272 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 6 இலட்சத்தை...

மேலும் 840 கோவிட் - 19 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, நாட்டில் 2020 ஜனவரி முதல் நேற்றுவரை பதிவான மொத்த கோவிட் - 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 203ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மகனை தேடி...

ராமாயி (வயது - 78) என்ற தாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது வளர்ப்பு மகனான ரா.இந்திரபாலன் (வயது - 38) கடந்த 2007ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவரைத்தேடி வவுனியாவில் கடந்த 1799 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தர போராடியிருந்தார். (ம-299)

## புலமைப்பரிசில்...

களில் இடம்பெறவுள்ள இந்தப் பரீட்சையில், மூன்று இலட்சத்து 40 ஆயிரத்து 508 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

கோவிட்-19 தொற்றுறுதியான பரீட்சார்த்திகளுக்காக 108 பிரத்தியேக பரீட்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விசேட பரீட்சை மையங்களுக்கு செல்லும் மாணவர்கள், ரெபிட் அண்டிஜன் அல்லது பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையைக் கொண்டுசெல்ல வேண்டும் என பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதா தெரிவித்துள்ளார். (ம)

## தீயில் எரிந்து...

டைய லக்சிகா எனும் அவரது மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தந்தையும் மகனும் குடும்பச் சுமை காரணமாக கூலி வேலைக்கு வெளி மாவட்டத்துக்கு சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தருமபுரம் பொலிஸார், தற்கொலையா? கொலையா? என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-100)

## சிகிச்சை நிலை...

னால் சிகிச்சை நிலையங்கள் உட்பட 5 பகுதிகள் எரிந்து நாசமாகியுள் என.

சுமார் ஒரு கோடி பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் எரிந்து சாம்பலானதாக முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனாலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் ஒருபகுதியான மார்பு நோய் சிகிச்சை நிலையம், பாலியல் நோய் சிகிச்சை நிலையம், பரிசோதனை அறை, களஞ்சிய அறை, வைத்திய சிசிச்சை அறைகள் என்பன எரிந்து நாசமாகின என வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் தீ விபத்தில் ஒரு கோடி பெறுமதியான வைத்திய உபகரணங்கள் நாசமானதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதோடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்திருந்தார். (ம-100.315.316)

## ஜனாதிபதி...

டுத்துவதாகவும் கூறினார்.

இந்த சம்பவம் குறித்த விசாரணை இடம்பெறும்போதே அதில் சம்பந்தப்பட்டவருக்கு பதவி உயர்வு வழங்கப்படுகின்றது என்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

அதேபோல், புதிய அரசியலமைப்பு குறித்து பேசும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமே, 20ஆவது திருத்தம் மூலம் சர்வாதிகார ஆட்சியை உருவாகியுள்ளது என அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பை மாற்றி ஆட்சியாளர்களை உறுதிப்படுத்துவது அவசியமில்லை. மாறாக அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டார்.

எனவே இந்த மாற்றத்தை மக்களே மாற்றியமைக்க வேண்டும் என்றும் புதிய அரசியல் பயணமொன்றை உருவாக்கினாலேயே இளம் சமூகத்திற்கு நன்மை கிடைக்கும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார். (ம)

## சுன்னாகம், இள...

ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 5 தங்கச்சங்கிலிகளும் மீட்கப்பட்டுள்ளதோடு திருடுவதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் அண்மையில் சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது.

பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் புத்தூரைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 7 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள் என.

சந்தேக நபர்களிடமிருந்து நகைகளை கொள்வனவு செய்த சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் நகர நகைக்கடை உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்றும் பொலிஸார் கூறினர். (ம-33.104)

## ஜன...

ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட சில கருத்துக்களை உள்ளடக்குமாறு கோரியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் கடந்த சந்திப்பின்போது தேர்தல் செலவினங்களைக் குறைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (ம)

## கஞ்சாவுடன் சுழிபுரத்தில் தம்பதியர் கைது

(சுழிபுரம்)

கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதியர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று உரப்பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 85 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் பறாளை பகுதியில் உள்ள வீட்டு வளாகத்திலிருந்து கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட நிலையில் 36 வயதுடைய கணவரும் அவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர். (ம-33)


தன நிதானய — திகதி - 2022.01.21 — சீட்டிழுப்பு இலக்கம் - 684 — J 02 10 20 61

கொவிசெத — சீட்டிழுப்பு திகதி 21.01.2022 — சீட்டிழுப்பு இலக்கம் 2949 — C 07 34 47 72

மஹஜன சம்பத — திகதி 2022/01/21 — சீட்டிழுப்பு இலக்கம் 4654 — Z 8 3 4 3 2 4

செவன — திகதி 21/01/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 346 — S 05 13 40 82

மெகா பவர் — திகதி 21/01/2022 — சீட்டிழுப்பு இலக்கம் 1002 — F 04 35 55 60 76

வாசனா சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1686 — திகதி 2022.01.21 — Z 81 88 92 93

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1631 — நிறம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 21.01.2022 — தினம் வெள்ளி — N 28 37 44 64 — அடுத்த சுப்பர் ஜக்பொட் : 55,578,055/=

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 124 — சீட்டிழுப்பு திகதி 21.01.2022 — வெள்ளிக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 09 10 32 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,216,820/-

சனிதா — வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2022.01.21 — சீட்டிழுப்பு இல: 3792 — ரூ. 3,904,440/- — வெற்றி இலக்கங்கள் 05 26 44 73 U

ராசி — திகதி 21.01.2022 — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/= — வெற்றி வாரம் 3343 — வெற்றி இலக்கங்கள் 05 18 29 58 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,709,600/=

12 — H 18 18 24 28 72 — சீட்டிழுப்பு வாரம் 807 — 2022.01.21 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 206,005,027/- — தொலை பேசி : 011-2 333 546-47 — Web : www.dlb.lk

அத கோடிபதி — வெள்ளிக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1457 — சீட்டிழுப்பு திகதி: 2022.01.21 — ரூ. 4,945,980/- — 01 30 38 45 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நெடுங்குளம் வீதியில் (A9 வீதியிலிருந்து 500m) சிறிய வீட்டுடன் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) (9737)

**076 161 9826**

## யாழ்ப்பாணத்தில் படிப்பு & கனடாவில் வேலை

மேலதிக விபரங்களுக்கு

21,22,23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சர்வதேச கண்காட்சியில் STALL-C19 (C-3578)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்

777-068-777

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாளர் தேவை. (9779)

**077 624 8327**

## மணமகள் தேவை

யாழ். இந்து, 1985 ரேவதி நட்சத்திரம், மீனராசி, 7 ஆம் இடத்தில் சூரியன், செவ், புதன் 53 1/2 பாவம் உடைய கச்சேரியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்று பவரிற்கு அரச உத்தியோகத்தில் மணமகள் தேவை. (9750)

**071 446 4722**

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் ஹாட்வெயர் கடைக்கு அனுபவமுள்ள கணக்காளர் தேவை. (9767)

**070 640 6905**
**077 541 3064**

## பிரத்தியேக வகுப்பு

தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 6 தொடக்கம் O/L வரை

தமிழ் இலக்கியநயம்

தரம் 10,11 (9762)

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் சி.ரகுபதி

**077 938 9478**

## சிறுநீரகம் தேவை

45 வயதுடைய ஆண் ஒருவருக்கு A+ / O+ இரத்த வகையினை சேர்ந்த சிறுநீரகம் தேவை. தகுந்த உடற்றகுதி உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (9776)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

**077 706 1237**
**077 869 4518**

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3577)

0768226240 DHL

## தென்னந்தோட்டங்கள் விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் A9 வீதியிலிருந்து 3/4 Km தூரத்தில் 12 1/2 ஏக்கர், 16 ஏக்கர், 28 ஏக்கர். மேலும் எமக்கு சொந்தமான வேறு காணிகளும் விற்பனைக்கு உண்டு. (9764)

**077 653 1980**
**074 037 1960**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9777)

**076 825 7716 (ஆகாஸ்)**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 12 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்.

வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு)

ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். (9756)

**077 288 0152**
**077 911 6983**

## IELTS

A course that can change the course of your life!

Improve your vocabulary | Grammar | Spoken | Accent | Personality etc.

Success Assured! Enroll Now

Contact : 077 880 3887

IELTS - PREPARATION CENTRE

PALALY ROAD - URUMPIRAI

(உரும்பிராய் - பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக) (3589)

## வடஇந்திய காசி யாத்திரை

ஆரம்பம் : 20.04.2022 | நாட்கள் : 16

காசி, கயா, அலகாபாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, இராமேஸ்வரம், சீரடி பாபா, மும்பாய், கொல்லிமலை, சித்தர் பூமி.

- விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவுசெய்க.
- 10 பேர் மட்டும்.

இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்

T. ஸ்ரீரெங்கநாதன்

T.P. 077 768 0102, 077 693 9716

நீண்ட நாட்களின் பின் ஆரம்பமாகின்றது. உங்களின் ஆதரவை நாடுகின்றேன். (C-3593)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக்கிணற்றடி அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை,

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 814 7389, 077 614 7333**

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 6 பரப்புக் காணி கட்டுமாணப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A32 பிரதான வீதியில் இருந்து 700 மீற்றர் தூரம்.
- முற்றிலும் பயன்தரும் 30 தென்னைகள் உள்ளன.
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடிப் பாதையுடன்

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

ஒரு பரப்பின் விலை 3 இலட்சம். (9774)

தொடர்புகளுக்கு:-

**077 117 8578 | 077 814 7389**

## இன்று இரண்டாம் நாள்



## வாருங்கள்!

12ம் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2022

CONCURRENTLY WITH

Higher Education & Career Exhibition

KALVI JAFFNA 2022

21 22 23 ஜனவரி JANUARY

jitf.lk www.jitf.lk

10.00மு.ப - 8.00பி.ப முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

ORGANIZED UNDER HEALTH GUIDELINES

MAIN SPONSOR: INSEE CEMENT | CO - SPONSOR: SLTMOBITEL

OFFICIAL PARTNERS: SAFETY & HYGIENE | FOOD | PRINT MEDIA | ELECTRONIC MEDIA

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION | IN ASSOCIATION WITH | ENDORSED SUPPORTED BY | PARTNER COUNTRY

(C-3591)

For more information:

Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org